தினமணி

# மகளிர்மணி

08-05-2019

# வாழ்க்கைக்கான பாடம் கற்று தரும் பரதம்!

கடந்த 20 ஆண்டுகளில் கர்நாடக இசை, பரதம், மோகினியாட்டம், கூடியாட்டம், கதகளி, ஒடிசி என இந்திய பாரம்பரிய கலைகள் குறித்து 40 புத்தகங்களை (ஆங்கிலம்) எழுதியுள்ளார் பரதநாட்டிய கலைஞரான வித்யா பவானி. அவர், தற்போது பரதநாட்டியம் குறித்து 6– ஆவது புத்தகமாக 'வாட் இஸ் பரத நாட்டியம்?' என்ற நூலை எழுதி வெளியிட்டுள்ளார். பரதம் குறித்தும் திட்டமிடல் குறித்தும் 2 பிரிவுகளாக உள்ள இந்த புத்தகம் குறித்து அவர் நம்முடன் பகிர்ந்து கொண்டவை:

''பல ஆண்டுகளாக பரதம் கற்றுக் கொண்டாலும், ஒவ்வொரு முறையும் நிகழ்ச்சி செய்யும் போது தான் எனக்கு பரதத்தின் மீது அதீத புரிதல் ஏற்பட்டது. அந்த புரிதலில் ஒன்று கர்நாடக இசை ஆகட்டும், பரத நாட்டியமாகட்டும் ஒரு திரைப்படத்தை அனைத்து தரப்பு மக்களும் புரிந்து கொள்ளும்படி புரிந்து கொள்ள முடியவில்லை என்பதும், அந்தக் கலையைப் பற்றிய புரிதல் உள்ளவர்களால் மட்டுமே புரிந்து கொள்ள முடிகிறது என்பதும். அதனால் எனது நாட்டிய நிகழ்ச்சி துவங்கும் முன் அன்றைய நடனத்தை பற்றி ஒரு முன்னுரை கொடுப்பேன். ஆனால் அது மட்டுமே பரதம் குறித்து மக்கள் மனதில் விழிப்புணர்வு ஏற்படுத்த முடியாது என்று தோன்ற, அனைவரும் நமது பாரம்பரிய கலைகள் குறித்து புரிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில்தான் ஆங்கிலத்தில் எனது முதல் புத்தகத்தை எழுதினேன். அதற்கு நல்ல வரவேற்பு கிடைக்க, தொடர்ந்து எழுத தொடங்கினேன்.



பரதம் பற்றி மட்டும் இல்லாமல், மற்ற நடனக் கலை மற்றும் கர்நாடக சங்கீதம் குறித்தும் புத்தகம் எழுதினேன். ஒவ்வொரு கலை பற்றி எழுதும் போது அதற்காக பயணம் செய்வேன். உதாரணத்திற்கு கதகளி நடனம் பற்றி எழுதும்போதும் கேரளா முழுதும் இரண்டு மாதம் பயணம் செய்தேன். அந்த கலைஞர்களை சந்தித்து பேசினேன்.

பரதத்தை குறித்து இது என்னுடைய ஆறாவது புத்தகம். 'வாட் இஸ் பரதநாட்டியம்'? கொஞ்சம் வித்தியாசமான புத்தகம். இதுவரை நான் எழுதி இருக்கும் அனைத்து புத்தகங்களும் கலை மற்றும் கலாசாரத்தை சார்ந்துதான் இருக்கும். இந்த புத்தகம் முழுக்க முழுக்க தன்னம்பிக்கை ஏற்படுத்தக் கூடியது. அதாவது பரதநாட்டியம் மூலம் நாம் அறிவது நம்முடைய வாழ்க்கைக்கான பாடங்கள் என்று சொல்லலாம். பொதுவாக நாம் மோட்டிவேஷனல் குறித்த புத்தகங்களை படிக்கும்போது, அதில் பாசிடிவ் திங்கிங், வாழ்க்கையை வெற்றிகரமாக எப்படி அமைக்கலாம்... போன்ற விஷயங்கள் பற்றி குறிப்பிட்டு இருக்கும். அதை பரதத்தின் மூலம் எப்படி பயன்படுத்தலாம் என்று சொல்லி இருக்கிறேன்.

இது போன்ற புத்தகங்களை படிக்கும் போது அல்லது பரதத்தை கொண்டு எழுதும் போது, முதலில் பரதம் குறித்த அடிப்படை விஷயங்கள் தெரிந்து இருக்கணும். பரத நாட்டியத்தில் கிருதி, ஜதின்னு வார்த்தைகள் பயன்படுத்துவது இயல்பு. அந்த வார்த்தைக்கான அர்த்தங்கள் முதலில் புத்தகம் படிப்பவர்களுக்கு புரிய வேண்டும். அடுத்து, பரதத்தில் பயன் படுத்தப்படும் வார்த்தைகள் எவ்வாறு நம்முடைய வாழ்க்கைக்கான பாடங்களை சொல்லித் தருகின்றன என்பதை குறிப்பிட்டு இருக்கிறேன்.

உதாரணமாக, நவரசம். நம் வாழ்க்கையில் நாம் சந்திக்கும் ஒவ்வொரு விஷயத்துக்கும் நம்முடைய முகபாவங்கள் மாறுபடும். அதை நம்முடைய வாழ்க்கை முறையில் ஒவ்வொன்றாக விளக்கி இருக்கிறேன்.

தாளம், இதில் நாம் ஒன்றை விட்டாலும், ஜதி தப்பாகும். தாளத்தை கால நிர்வாகத்துடன் **(time management)** ஒப்பிடலாம். சிறிது நேரம் தவறினாலும் நாம் செய்ய வேண்டிய ஒவ்வொரு காரியமும் பின்னடையும். அது போன்று பதம், இதை சோஷியல் மீடியாவுடன் இணைத்திருக்கிறேன். மார்க்கம்... நமக்கான முக்கியத்துவத்தை எவ்வாறு தேர்வு செய்வது..., அதுவும் சொல்லுவாள்... இது ஒரு பதம். மனதில் அளவில்லாத பொறாமை ஏற்படுவதும், அந்த பொறாமை நம் தன்னம்பிக்கையை எவ்வாறு உடைக்கிறது என்பதையும் புரியவைத்திருக்கிறேன்.

சாத்விகா அபிநயா என்பது ஓர் அபிநயம். அதாவது சில செயல்கள் நம்மை மீறி வெளிப்படும் என்பதை இந்த அபிநயம் குறிக்கும். குறிப்பாக நம் உணர்வுகள் தூண்டப்படுவதால் வெளிப்படும் செயல்கள். கோபத்தில் நாம் பேசும் வார்த்தைகள் மற்றவர்களைப் பாதிக்கும். எந்த ஒரு விஷயத்தையும் மனதால் யோசித்து செயல்பட வேண்டும் என்று இதன் மூலம் உணர்த்தி இருக்கிறேன்.

ஆஹார்யா அபிநயா என்றால் ஆடை அலங்காரம். ஒரு நடனத்திற்கு தயாராக குறைந்த பட்சம் 2 மணி நேரமாகும். கண் மை அலங்காரம் சரியாக இல்லை என்றால் கூட நடனம் ஆடும் போது தெரியும். அதுபோன்று தான் நாம் எங்கு சென்றாலும் நம்முடைய ஆடை அலங்காரம் மிகவும் அவசியம். ஒரு பத்து நிமிடமாவது நமக்கான நேரத்தை ஒதுக்க வேண்டும். இது போன்று பத்து விதமான வாழ்க்கைக்கான அடிப்படை விஷயங்களை பரதத்துடன் ஒப்பிட்டு எழுதி இருக்கிறேன்.

எல்லாருடைய வாழ்க்கையிலும் ஒரு வழிகாட்டி அவசியம். அந்த வழிகாட்டியாகத்தான் பரதம் மூலம் வழங்கி இருக்கிறேன். அதுமட்டுமில்லாமல், இந்த புத்தகத்தை படிப்பவர்களுக்கு வாழ்க்கையுடன் இணைந்து பரதம் குறித்து அடிப்படை விஷயங்களை தெரிந்துகொள்ள முடியும். என்னுடைய முக்கிய நோக்கமே பரதக் கலையை மக்கள் மனதில் புரிய வைப்பது தான். அதன் மூலம் இந்த கலையை பற்றி அனைவரும் தெரிந்து கொள்ள இந்த புத்தகம் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்'' என்றார் வித்யா பவானி.

–ஸ்ரீ

